**ஊவா – பரனஹம பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 31 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து, ஊவா-பரணஹம பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஜேசீபி கருவின் பெறுமதியானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 954,179 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார் வாகனங்கள் மற்றும் கார்கள் ரூபா 4,394,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 104,990 பெறுமதியான உழவு இயந்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அத்தகைய வாகனத்தின் உள்ளதன்மை பௌதீக செவ்வையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 1,400,000 பெறுமதியான சில வாகனங்களது கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 312,282 செலவு மீதி தொங்கல் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) கற்குவியலின் ஆரம்ப மற்றும் இறுதி இருப்புக்கள் முறையே 5,293,786 மற்றும் ரூபா 232,168 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) ரூபா 9,281,250 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட காணியொன்று மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிலையான சொத்துக்கள் மீதான வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 52,609 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான உள்ளூராட்சி ஓய்வூதியத்திற்கென பங்களிப்புக்கள் கணக்குகளில் ரூபா 30,570 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணங்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,800,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டிற்காக நீதிமன்ற தண்டப்பணங்களின் நிலுவைகள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,664,393 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்கான முத்திரைத் தீர்வைக்கான வருமானம் ரூபா 797,958 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்குகளின் மீதிகளுடன் அதற்கு நேரொத்த பட்டியல்களிலுள்ள மீதிகளையும் ஒப்பிடுகையில் ரூபா 34,961,413 தொகையான இணக்கஞ் செய்யப்படாத மீதி அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சபையின் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்கின் பெறுமதி ரூபா 23,237,108 ஆகவிருந்த அதேநேரம் அத்திகதியிலுள்ளவாறான செலுத்த வேண்டிய கணக்கின் பெறுமதி ரூபா 15,768,602 ஆகவிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

ரூபா 374,772 தொகையான முற்பணக் கொடுப்பனவானது நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,889,001 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டு வரும் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 10,882,900 ஆகவிருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

(அ) முன்னைய ஆண்டுடன் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிலுவை வருமானம் ரூபா 2,133,645 ஆகவிருந்தது.

(ஆ) தற்போதுள்ள வருமானத்தை அதிகரிப்பதற்கு 2012 ஆம் ஆண்டிலிருந்து போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 குத்தகை வாடகை

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது குத்தகை வாடகையாக அறவிடப்பட்ட ரூபா 124,000 தொகை வைப்புக் கணக்கிலிருந்தது.

**2.2.3 ஏனைய வருமானம்**

வைக்கோ இயந்திரத்தை பயன்படுத்துவது தொடர்பாக வெளித்தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 131,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து ரூபா 10,929,014 கூட்டுத்தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களும் முத்திரைத் தீர்வைகளும் அறவிட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**ஒப்பந்த நிர்வாகம்**

**ஊவா – பரனஹம பிரதேச சபையின் கட்டிடத்தை புனரமைத்தல்**

ஊவா – பரனஹம சபை கட்டிடத்தின் நிர்மாணத்தில் பின்வரும் குறபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூறுவிலைக்கிடல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், பற்றுச்சீட்டிற்கான கொடுப்பனவு, வேலைகளை மதிப்பிடல் ஏனையவை போன்றன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 7,424,009 பெறுமதியான நிர்மாணங்கள் தொடர்பில் கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை.

(இ) நிர்மாண வேலைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,330,656 கொடுப்பனவு தொடர்பிலான கணிப்பீட்டிற்கான பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவீன முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்**

வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

2016 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) கணக்கீடு
(இ) களஞ்சிய முகாமைத்துவம்
(ஈ) வாகனங்கள் மீதான கட்டுப்பாடு
(உ) கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள்